**பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை - 2019, 2020, 2021 மற்றும் 2022**

---

பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2019, 2020, 2021 மற்றும் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாடுகள் மீதான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் மற்றும் 2018 இன் 32 ஆம் இலக்க பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை மீதான சட்டத்தின் 22 பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், அதிகாரசபையால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

அச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொறு நிறுவனம் தொடர்பாகவும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதி மூலம் அறிவிக்கப்பட்டவாறான காலப் எல்லையினுள் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சர்ப்பிக்க வேண்டும்.

அச்சட்டத்தின் 38(1)(இ) ஆம் பிரிவின் பிரகாரம், வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கப்படுவதனை உறுதி செய்ய வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்கு உரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டும்.

**1.3 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடி/12 கொண்ட பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 பரிவின் பிரகாரம் மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 சுற்றறிக்கையுடன் சமர்பிக்கப்பட்ட செயற்பாட்டு கைநூலின் 6.6 இலக்க பந்தி பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த நகழ் அறிக்கையை கணக்காய்காளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆகிய வருடங்களின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த நகழ் அறிக்கை 2023 | ஏற்றுக் கொள்கிறேன்.<br><br>ஆளணியனர் இல்லாத காரணத்தால் குறித்த பணிகளை மேற்கொள்ள முடியவில்லை. 2019, 2020, 2021 அறிக்கைகள் தற்போது பணிப்பாளர் சபை அறிவுறுத்தல் பிரகாரம் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரிற்கு சமர்பிக்கப்பட்டு பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளள. அதன் பிரகாரம் | சுற்றறிக்கை பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த நகழ் அறிக்கையை கணக்காய்காளர் நாயகத்திற்கு சமர்பிக்கவேண்டும். |

| | | |
|---|---|---|
| சனவரி 15 திகதியளவிலும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வாளர் நாயகத்திற்கு விரைவில் சமர்பிக்க நடவக்கை எடுக்கப்படும். | |

**1.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டின் செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் ஆகிய மாதங்களிற்காக நபர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 60,000 வீதம் ரூபா 120,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் வவுசருடன் மேற்கொள்ளப்பட்ட பணிகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் குறித்த கொடுப்பனவின் சரியான தன்மையை பரீட்சிக்க முடியவில்லை. | உதவிப் பணிப்பாளர் (நிர்மாணம்) இற்காக ஆட்சேர்பகப்பட்ட திரு எஸ்.ஜீ.பிரஜீவன் அவரிற்கு மாதாந்தம் ரூபா 60,000 செலுத்தப்பட்டுள்ளதுடன், அந்த ஆட்சேர்ப்பிற்காக 2019.06.03 திகதிய இலக்கம் 5/2 கொண்ட பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | கடமை ஒப்படைப்பு மற்றும் மேற்கொண்ட பணிகள் தொடர்பான விபரம் குறித்த வவுசருடன் சமர்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020.09.08 திகதி நடாத்தப்பட்டிருந்த பணிப்பாளர் சபை கூட்டத்துடன் தொடர்பான முடிவுகள் மற்றும் பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கை கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். குறித்த கூட்ட அறிக்கை காணப்படவில்லை. | பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கையை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். |

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கு இணக்கமின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக் கான தொடர்பு | இணக்கமின்மைகள் | | |
| (அ) | நி.பி.1645(அ) | WP KD – 4194 இலக்க வண்டியின் வாகன சம்பவக் குறிப்புப் புத்தகத்தை முறையாக மற்றும் ஒழுங்காக பூரணப்படுத்தி குறிப்பு இட்டிருக்கவில்லை. | குறித்த திகதியில் வழங்குமாறு சாரதி அறிவூட்டப்பட்டள்ளார். தற்காலிக அடிப்படையில் அதிகாரசபைக்கு வழங்கியுள்ள வாகனத்திற்காக தரப்பட்ட சம்பவக் குறிப்புப் புத்தகம் அமைச்சின் போக்குவரத்து அலுவலரினால் நாளாதுவரையாக்கப்பட்டுள்ளது. | சம்பவக் குறிப்பு புத்தகத்தை முறையாக மற்றும் ஒழுங்காக பூரணப்படுத்த வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நி.பி.1645 (ஆ) மற்றும் (இ) மற்றும் நி.பி.1646 | தின ஓட்டக் குறிப்பு பிரகாரம் மாதாந்த பொழிப்புக் குறிப்பை ஒவ்வொரு மாதமும் முடிவடைந்த பின்னர் அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் பயன்படுத்தப்படும் இரண்டு வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு அனுப்பியிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மாதாந்த பொழிப்புக் குறிப்பை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டும். |

**2. செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | | |
|---|---|---|
| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 கொண்ட நிதி மற்றும் கொள்கைகள் திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கை பிரகாரம் அதிகாரசபையின் முகாமைத்துவ தீர்மானமெடுத்தல் தொடர்பில் குறைந்தபட்சம் மாதாத்திற்கு ஒரு முறை பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்த வேண்டிய போதும், 2019 ஆண்டினுள் 10 கூட்டங்களும், 2020 ஆண்டினுள் ஒரு கூட்டமும் 2021 ஆண்டினுள் இரண்டு கூட்டங்களும் மற்றும் 2022 நவம்பர் 30 தகிதி வரை 05 கூட்டங்களும் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கிறேன்.<br><br>அதன் பிரகாரம் நிறுவனத்தின் நிதி ஏற்பாட்டை கவனத்திற் கொண்ட அத்தியவசிய பணிப்பாளர் சபை தீர்மானங்களை பெற்றுக் கொள்ள அத்தியவசிய கூட்டங்கள் மாத்திரம் இடப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை பிரகாரம் குறைந்தபட்சம் மாதாத்திற்கு ஒரு முறையேனும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடாத்த வேண்டும். |

**2.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | | | |
|---|---|---|---|
| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| (அ) | 2018 ஒக்டோ்பர் மாதம் 04 திகதிய 2018 இன் 32 இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையை ஸ்தாபித்துள்ளதுடன் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் மேற்கொள்ள வேண்டிய பின்வரும் பணிகள் உள்ளடக்கப்படும் வகையில் நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | 2021 - 2025 கூட்டிணைந்த திட்டம் மேற்கூறிய செயற்பாடுகளை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும். |

(i) அமைச்சருடன் கலந்தாலோசித்து, பெயரிடப்பட்ட பிரதேசங்களில் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான அரச திட்டங்கள், நிகழ்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.

(ii) அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக செயற்படும் போது பெருந்தோட்டப் பிராந்தியத்திலுள்ள ஏனைய தேசிய, பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தும் முகவர் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

(iii) புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்க திட்டங்கள், நிகழ்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரிக்கும் போது மற்றும் பெயரிடப்பட்ட பிராந்தியங்களில் நடைமுறைப்படுத்தும் போது பெருந்தோட்டப் பிராந்தியத்தில் உள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகளின் பங்களிப்பை உறுதி செய்தல்.

(iv) பெயரிடப்பட்ட பிரதேசங்களின் தோட்டங்களில் உள்ள வீடுகளின் சட்டப்பூர்வ குடியிருப்பாளர்களுக்கு அந்த வீடுகளின் உரிமையை வழங்குவதற்காக, அந்த குடியிருப்பாளர்களிற்கு உரிமை உறுதிகளை வழங்குவதனை எளிதாக்குதல்.

(v) பெயரிடப்பட்ட பிரதேசங்களின் தோட்டப் பகுதிகளிலுள்ள இளைஞர் சமூகத்திற்கு அவர்களின் கல்வி அபிவிருத்திக்காக மூன்றாம் நிலை மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்காக உதவுதல்.

(vi) பெயரிடப்பட்ட பிரதேசங்களின் சமூகத்திற்கு அத்தியவசிய சேவைகளை வழங்குவதற்கு வசதியாக மாகாண சபை அமைச்சுக்கள் மற்றும் ஏனைய

அரசாங்க அமைச்சுக்களின் பிரதேச மட்ட அலுவலகங்களுடன் பணியாற்றுதல்.

(vii) பெயரிடப்பட்ட பிரதேசங்களின் தோட்ட சமூகத்தினருக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை மேம்படுத்தல் மற்றும் இது தொடர்பில் தேவையான வழிகாட்டல் மற்றும் உள்ளீடுகளை வழங்குதல்.

(viii) புதிய வாழ்வாதார வழிகளை உயர்த்துவதற்கு பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் மற்றும் சிறப்புத் தேவையுடையவர்கள் உள்ளிட்ட பல்வேறு சமூகக் குழுக்களை வழுப்படுத்துதல்.

(ix) பெயரிடப்பட்ட பிரதேசங்களின் தோட்டங்களில் அமைந்துள்ள வீடுகளின் சட்டப்பூர்வ குடியிருப்பாளர்களின் வழித்தோன்றல்களுக்கும் அந்த சட்டப்பூர்வ குடியிருப்பாளர்கள் அனுபவிக்கும் அனைத்து வசதிகளும் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.

(x) பெயரிடப்பட்ட பிரதேசங்களின் நிலம் மற்றும் நீர் மூலகளின் பௌதீக ரீதியான பின்னடைவை குறைத்தல் மற்றும் சூழல் மாசடைதலை ஒழிப்பதனை நோக்காகக் கொண்டு நிவாரண மற்றும் பிரதிஉபகாரம் ஆகிய இரு வகையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அனைத்து மட்டங்களிலும் வழுப்படுத்துதல்.

(xi) தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி அமைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துடன் கலந்தாலோசித்து, பெயரிடப்பட்ட பிரதேசங்களிலுள்ள அபாயகரமான பகுதிகளை அடைபாளப்படுத்தல் மற்றும் குடியிருப்பு நோக்கங்களுக்காக சட்டவிரோத குடியேற்றங்களில் இருந்து பாதுகாத்து அவற்றை மாற்று ஆக்கபூர்வ பயன்பாட்டிற்கு

| | | |
|---|---|---|
| திருப்புதல்.<br><br>(xii) பெயரிடப்பட்ட பிரதேசங்களில் போதிய சமூக சேவைகள் மற்றும் போதிய நிலைபேறான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதை மேம்படுத்தல். | | |
| (ஆ) அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்ட 2019 ஆண்டு மார்ச் முதல் கணக்காய்வு திகதிய 2022.12.31 திகதி வரை 03 ஆண்டுகளுக்கும் அதிக காலம் நிறுவனத்தை நடாத்திச் சென்றுள்ள போதும் அந்த மொத்தக் காலப் பகுதியிலும், அரச செலவு மற்றும் வெளிநாட்டு மானியங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த 1000 வீடுகள் தொடர்பான உறுதிகள் நலனாளர்களுக்கு வழங்கும் ஆரம்ப கட்டத்தின் கீழ் 375 உறுதிகளை வழங்கும் திட்டத்தின் ஆரம்ப பணிகள் மேற்கொண்டு வழங்க முடியுமான கிட்டத்தட்ட 300 அளவான உறுதிகளின் பணிகளை பூர்த்தி செய்து நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ளல், அபிவிருத்தி கருதிட்டங்களின் கீழ் பெறுமதி ரூபா 3,968,304 ஆன 08 பாதைகள் கொங்கிரீட் இடும் கருத்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.<br><br>மேலும் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த மீண்டுவரும் செலவுகள் முறையே ரூபா 2,318,382 தொகை ரூபா 1,891,480 தொகை ரூபா 3,286,774 தொகை மற்றும் ரூபா 8,145,340 தொகையாகும். 2019, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பணிப்பாளர் சபைக் கூட்ட செலவாக முறையே ரூபா 470,000 தொகை ரூபா 53,815 தொகை மற்றும் ரூபா 331,759 தொகை செலவிடப்பட்டிருந்தது. தொத்த மீண்டுவரும் செலவில் சம்பளம் மற்றும் படிகளிற்காக 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூபா 1,839,842 அல்லது 79 சதவீதமும் ரூபா 1,817,088 அல்லது 96 சதவீதமும் ரூபா 3,109,592 அல்லது 95 சதவீதம் மற்றும் ரூபா 6,040,648 அல்லது 74 சதவீதமாக மொத்த சம்பளம் மற்றும் படிகளிற்காக ரூபா 12,807,170 செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | செயற்திறனை உயர்த்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளரின் 2021 செப்டம்பர் 22 திகதிய MCEEID/2/STMF/2020/2/temporary இலக்கம் கொண்ட நியமனக் கடிதத்தின் பிரகாரம் வரிசை அமைச்சின் செயலாளரினால் அதிகாரசபையின் பணிப்பாளர் பதவிகளில் கடமை மேவுகைக்காக சௌம்மியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவியில் கடமையாற்றும் அலுவலரை 03 மாத காலத்திற்கு அதாவது 2021.09.21 திகதி இலிருந்து இந்த அதிகாரசபையின் பணிப்பாளர் நிர்வாகம் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். அக்காலப்பகுதியின் இறுதியில் சேவை நீடிப்பு வழங்கப்படுமாயின் உரிய நியமன அதிகாரியான பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட வேண்டிய போதும் இரண்டு சந்தர்ப்பங்களில் 06 மாதங்கள் வீதம் இரண்டு காலப்பகுதிகளுக்கு அதிகாரசபையின் தலைவரினால் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே நியமனக் கடிதத்தின் பிரகாரம் அப் பதவியில் கடமை மேவுகைக்காக எவ்வித ஊதியமும் பெற உரிமையற்றவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் அக்கடிதத்தின் நிபந்தனைகளுக்கு முரணாக இக்கடமை மேவுகைக்காக இந்த அலுவலரிற்கு 2022 பெப்ரவரி முதல் 2022 திசெம்பர் வரை ரூபா 220,811 செலுத்தப்பட்டிருந்தது. | அதிகாரசபையினால் அந்த அலுவலரை அதிகாரசபையின் மேற்படி பதவிக்கு பதிற்கடமை அடிப்படையில் ஆட்சேர்க்க 2022.02.11 திகதிய பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சேபை நீடிப்பு வழங்கல் மற்றும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது அந்த பதிற்கடமை அடிப்படையில் செய்யப்பட்ட நியமனத்திற்காகும். அதனால் பெப்ரவரி முதல் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | சேவை நீடிப்பு வழங்க பணிப்பாளர் சபை அங்கீகாரம் உள்ளதாக குறிப்பிடப்பட்ட போதும் அத் தீர்மானம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை ஆதலால் தாமதமின்றி அதனை சமர்ப்பிக்க வேண்டும். |

**2.4 பெறுகைகள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1 (ஆ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையினால் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கான பிரதான பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க வேண்டியதுடன் அதன் பின்னர் வருகின்ற ஆண்டிற்க்கான பெறுகைகள் நடவடிக்கைகளுக்காக விரிவான தகவல்கள் உள்ளடங்களாக | ஏற்றுக்கொள்கிறேன். 2022 ஆண்டு முதல் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் மற்றும் பெறுகைகள் நேர அட்டவணையை தயாரிக்க |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட வேண்டும். வழிகாட்டிக் கோவையின் 4.2.3 பந்தி பிரகாரம் பெறுகைகள் நேர அட்டவணை ஒன்றை தயாரித்து முறையான முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய போதும் அவ்வாறான பெறுகைகள் திட்டம் மற்றும் நேர அட்டவணையை அதிகாரசபையினால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | மடிக்கணினிகள் 03 இனை கொள்வனவு செய்வது தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் 2020 திசெம்பர் 18 திகதி மதிப்பீடு செய்யப்பட்ட விபரக்குறிப்பினால், மேலும் மடிக்கணினி ஒன்றை கொள்வனவு செய்வது தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அதே நாளில் மதிப்பீடு செய்யப்பட்ட விவரக்குறிப்புகளினால் அதே தேவைகளைக் குறிப்பிட்டிருந்தன. 2020 நவம்பர் 28 திகதி 03 மடிக்கணினிகளை கொள்வனவு செய்வதற்கு மற்றும் அதே நாளில் மற்றுமொரு மடிக்கணினியை கொள்வனவு செய்தல் எனும் இரண்டு சந்தர்ப்பங்களிலும் அதே 03 நிறுவனங்கள் கேள்வி வலை சமர்ப்பித்திருந்ததுடன் அந்த நிறுவனங்களினால் இரண்டு சந்தர்ப்பங்களிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகள் வேறுபட்டிருந்தன. மடிக்கணினிகளை கொள்வனவு செய்யும் போது குறைந்தபட்ச கேள்வி விலை சமர்ப்பித்திருந்த தனியார் வழங்குனரிடமிருந்து ரூபா 121,464 இற்கு ஒரு மடிக்கணினியை கொள்வனவு செய்து மேலும் 03 மடிக்கணினிகளை தலா ரூபா 190,000 வீதம் ரூபா 570,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | மேற்படி கெர்ளவனவுகள் 02 சந்தர்ப்பங்களில் செய்யப்பட்டன என்பனை ஏற்றுக்கொள்கிறேன். 02 மடிக்கணினிகளின் விவரக்குறிப்புகள் சமனானவை அல்ல. 02 சந்தர்ப்பங்களிலும் உத்தரவாதக் காலத்தின் பிரகாரம் விவரக்குறிப்புகள் மாற்றமடைந்துள்ளன.<br><br>உத்தரவாத காலம் 02 வருட மடிக்கணினிகள் ரூபா 121,464/-<br>உத்தரவாத காலம் 03 வருட மடிக்கணினிகள் ரூபா 190,000/-<br>அதனால் 02 சந்தர்ப்பங்களில் அல்லாமல் ஒரே தடவையில் கொள்வனவு செய்திருந்தாலும் மேற்படி கொடுப்பனவு செய்ய வேண்டும். இந்த மடிக்கணினிகளை கொள்வனவு செய்யும் போது ரூபா 205,608 தொகை அதிகமாக செலுத்தப்படவில்லை. விவரக்குறிப்பு வித்தியாசத்தின் மீது பெறுகைகள் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | மடிக்கணினிகள் 03 இனை கொள்வனவு செய்ய சமர்ப்பிக்கப்பட்ட விவரக்குறிப்புகளின் உத்தரவாத காலம் 03 வருடங்கள் என குறிப்பிடப்படவில்லை. அத்தகைய விவரக்குறிப்பொன்று இருப்பின் அதை தாமதமின்றி சமர்ப்பிக்க வேண்டும். |
| **2.5** | **மனித வள முகாமைத்துவம் கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| (அ) | இலக்கம் DMS/1849 கொண்ட 2019.08.15 திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட, ஆட்சேர்ப்பு | அதிகாரசபையினால் ஒப்பந்த அடிப்படையில் ஆளணியினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது | அங்கீகரிக்கப்பட்டுள்ள பதிவிகளிற்காக நிரந்தர |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டிய போதும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காது நிறுவனத்தில் நிரந்தர பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்து 2022 நவம்பர் 30 திகதியளவிலும் ஒப்பந்த காலத்தை நீட்டித்து நிறுவனத்தில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். பிரதேச பணிப்பாளர், உதவி/பிரதிப் பணிப்பாளர், நிர்வாக அலுவலர், அலுவலக உதவியாளர் மற்றும் சாரதி ஆகிய பதவிகளுக்கு நிரந்தர அலுவலர்களிற்கு பதிலாக ஒப்பந்த அடிப்படையில் 7 அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டு 6 மாதங்களிற்கு 6 மாதங்கள் காலத்தை நீட்டித்து நிறுவனத்தில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் நிரந்தர ஆளணியினரை ஆட்சேர்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஆளணியிளர் காணப்படுவதன் தேவைப்பாட்டின் மீது மற்றும் அது வரை அதிகாரசபையின் செயற்பாட்டு பணிப் பொறுப்பை மேற்கொள்வதற்காக ஆகும். ஒப்பந்த அடிப்படையில் அலுவலர்களை தொடர்ந்தும் பேணிக் கொள்ள ஏற்பட்டுள்ளது நிரந்தர அலுவலர்களை ஆட்சேர்க்க இயலுமை கிடைக்காததன் காரணமாக ஆகும். | அலுவலர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பதிற்கடமை காலத்தின் முடிவில் சேவை நீடிப்பு வழங்கப்படுமானால் குறித்த சேவை நீடிப்பை நியமன அதிகாரியான பணிப்பாளர் சபையினால் வழங்க வேண்டிய போதும் அதிகாரசபையின் பணப்பாளர் நாயகம், அபிவிருத்தி உத்தியோகத்தர், பணப்பாளர் போன்ற பதவிகளில் அலுவலர்களுக்கான கால நீடிப்பு தலைவரினால் வழங்கப்பட்டிருந்தது. | அந்த நியமனக் கடிதத்தில் சேவை முடிவுத் திகதி குறிப்பிடப்படாமல் முன்னைய நியமனத்தின் நீடிப்புக்காக நியமன அதிகாரியின் சேவைக் கடிதமொன்று தேவையில்லை. அதன் பிரகாரம் தலைவரினால் வழங்கியுள்ள சேவை நீடிப்பு அந்த அலுவலர்களுக்கு உரியதானது அல்ல. | சேவை நீடிப்பு நியமன அதிகாரியான பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட வேண்டும். |
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட பதிவிகளுக்காக் ஏதேனும் அலுவலர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அந்த ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் கால நீடிப்பு வழங்கும் போது நியமன அதிகாரியின் அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்பட வேண்டிய போதும் பிரதி பணிப்பாளரை 2020 நவம்பர் 01 ஆட்சேர்த்து 2022 திசெம்பர் 31 வரை 04 சந்தர்ப்பங்களிலும், நிர்வாக உத்தியோகத்தரை 2021 ஜூலை 01 ஆட்சேர்த்து 2022 திசெம்பர் 31 வரை 03 சந்தர்ப்பங்களிலும், சாரதி ஒருவரை 2020 நவம்பர் 19 திகதி ஆட்சேர்த்து 2022 திசெம்பர் 31 வரை 04 | இந்த அலுவலர்களின் ஆட்சேர்ப்பு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நியமனக் கடிதம் வழங்குதல், சேவை நீடிப்பு வழங்குதல் 2021.10.14 மற்றும் 2022.06.23 ஆகிய திகதிகளில் நடைபெற்ற பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் தலைவரினால் மேற்கொள்ளப்பட்டுளது. | சேவை நீடிப்பு வழங்க பணிப்பாளர் சபை அங்கீகாரம் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய போதும் அத் தீர்மானம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் தாமதமின்றி அதனை சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களிலும், இன்னுமொரு சாரதியை 2021 ஜுன் 01 ஆட்சேர்த்து 2022 திசெம்பர் 31 வரை 03 சந்தர்ப்பங்களிலும், அலுவலக உதவியாளரை 2021 ஜுலை 01 திகதி ஆட்சேர்த்து 2022 திசெம்பர் 31 வரை 03 சந்தர்ப்பங்களிலும் பணிப்பாளர் சபைக்கு பதிலாக தலைவரினால் சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தன. | | |
| (ஈ) | இலக்கம் 13/21 கொண்ட 2021 ஒக்டோபர் 12 திகதிய பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் நிறுவனத்தின் நிர்வாக உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் அலுவலகப் பணி உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு மூன்று அலுவலர்களை 2021 ஜுலை 01 திகதி ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்த போதும் அது தொடர்பான நியமனக் கடிதங்களை பரீட்சிக்கும் போது நிர்வாக உத்தியோகத்தரின் மற்றும் அலுவலகப் பணி உதவி அலுவலரின் நியமனக் கடிதங்கள் 2021 ஜுன் 18 திகதி அதாவது உரிய நியமனங்கள் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தன. சாரதி அலுவலர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக 2021 ஜுன் 01 திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் நியமனக் கடிதம் 2021 மே 21 திகதி அதாவது பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதிகளின் பின்னர் நியமனக் கடிதங்களை வழங்க வேண்டும். |
| (உ) | அதிகாரசபையின் உதவி/பிரதி பணிப்பாளர் பதவிகளுக்கு 12 விண்ணப்பதாரர்கள் 2021 ஜுலை 16 திகதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் வணிக நிர்வாகம், பொது நிர்வாகம், மனிதவள முகாமைத்துவம் மற்றும் வணிகம் ஆகிய விடயங்களிற்குரிய அடிப்படை பட்டம் மற்றும் அடிப்படை பட்டத்தின் பின்னர் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்ச ஒரு வருட சேவை அனுபவமேனும் தொழில் பட்டய கணக்காளர் நிறுவனமொன்றில் உள்ளக இடைநிலை பரீட்சை சித்தியடைதல் | அந்த கணக்காய்வு ஐயவினாயில் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப் பணிப்பாளர் அதிகாரசபையின் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் நிரந்தர நியமனங்களுக்கான அழைப்பு விடுக்கப்பட முன்னர் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் தேவையான குறைந்தபட்ச தகைமையாவது முகாமைத்துவ மட்டத்தின் ஒரு வருட குறைந்தபட்ச | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் அடிப்படை கல்வித் தகைமை மற்றும் குறைந்தபட்ச சேவை அனுபவம் உள்ள அலுவலர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் அதன் பின்னர் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு வருட குறைந்தபட்ட சேவைக் கால அனுபவம் பெற்றிருக்க வேண்டுடிய போதும் அத் தகைமைகள் இல்லாத மூன்று விண்ணப்பதாரர்கள் நேர்கமுகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இந்தப் பதவிக்கு பொருத்தமான முதல் அலுவலராக தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கு மேலே குறிப்பிட்டுள்ள பட்டங்களின் கீழ் அல்லாத திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை பட்டம் மற்றும் காப்புறுதி மற்றும் மதிப்பீட்டு தொடர்பான விஞ்ஞான பட்டமொன்று உரித்தாக இருந்தது. இரண்டாம் மற்றும் நான்காவது அலுவலராக தெரிவு செய்யப்பட்டிருந்த விண்ணப்பதாரர்கள் பட்டப்படிப்பின் பின்னர் முகாமைத்துவ மட்டத்தில் ஒரு வருட குறைந்தபட்ச சேவை அனுபவத்தை பூர்த்தி செய்திருக்கவில்லை.<br><br>மேலும் நேர்முகப் பரீட்சை சபையினால் இரண்டாவது அலுவலராக தெரிவு செய்திருந்த விண்ணப்பதாரர் அதன் போது இப்பதவிக்கு அனுபவம் இல்லாதிருக்கையில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு இருந்ததுடன் அவரிற்கு அங்கீகரிக்கப்பட்ட சம்பள அளவிலேயே 2020 நவம்பர் 01 முதல் கணக்காய்வு திகதிய 2022 திசெம்பர் 31 திகதி வரையும் ஒப்பந்த சம்பளமாக ரூபா 1,719,712 வழங்கப்பட்டிருந்தது. | சேவை அனுபவம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் பெற்றிருத்தலாகும். | |
| (ஊ) | அதிகாரசபையினால் அங்கீகார பதிவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் 2019 செப்டம்பர் 12 திகதிய பணிப்பாளர் சபை கலந்துரையாடல் குறிப்பின் பிரகாரம் 2021 பெப்ரவரி மாதம் 12 பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரி அவற்றில் பணிப்பானர், உதவி/பிரதி பணிப்பாளர் மற்றும் கணக்காளர் ஆகிய 03 பதிவிகளிற்கு 2021 ஜுலை மாதம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டிருந்த போதும் இந்த ஆட்சேர்ப்புகள் செய்யப்படவில்லை. 2020 நவம்பரில் உதவி பணிப்பாளர் மற்றும் சாரதி பதவிகளுக்கும், 2021 ஜுலை நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் பதவிகளிற்கும், 2021 ஜுன் இல் சாரதி பதவிக்கும், 2022 பெப்ரவரியில் உதவி பணிப்பாளர் | 2019 - 2021 வரை திறந்த விண்ணப்பங்களை கோரும் காலப்பகுதியில் நிரந்தர ஆட்சேர்ப்பு தாமதமானது நிறுவன முகாமைத்துவத்தின் பலவீனத்தால் ஏற்பட்ட ஒன்றல்ல. அது ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்குவதில் இடம்பெற்ற தாமதம் காரணமாக ஏற்பட்டுள்ளது.<br><br>ஆட்சேர்ப்புக்கான அங்கீகாரம் 2020.11.17 திகதி கிடைத்துள்ளது. 2021 ஆண்டிற்காக | திறந்த முறைமை ஒன்றின் பிரகாரம் அங்கீகரிக்கார பதவிகளை நிரந்தரமாக விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (கட்டுப்பாடு) மற்றும் சாரதி பதவிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் 07 அலுவலர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்ததாவும் திறந்த முறைமையின் பிரகாரம் மேற்படி அங்கீகார 07 பதவிகளையும் நிரந்தரமாக நிரப்புவதற்கான சாத்தியம் இருந்த போதும் அவ்வாறு செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | அத்தியாவசிய ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2021 ஆண்டில் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்பாடுகள் இல்லாததால் ஆட்சேர்ப்பினை பூரணப்படுத்த முடியவில்லை. | |

**3. கணகளிபொறுப்பும் நல்லாளுகையும்**

**3.1. கூட்டிணைந்த திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 பிரிவின் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிக்க 15 நாட்களிற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரதியொன்றை பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்த பின்னர் நாளாதுவரையாக்கிய வரவு செலவுத் திட்டத்துடன் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொது திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2020 - 2024 கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்படடு இருக்கவில்லை. 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை 01/2021 இன் பிரகாரம் 2021-2025 மூலோபாய கூட்டிணைந்த திட்டத்துடன் செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டம் வரிசை அமைச்சின் செயலாளர் ஊடாக் செயலாளர், பொது திறைசேரி மற்றும் பொது முயற்சிகள் திணைக்கள மற்றும் அரச வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம், பொது திறைசேரிக்கு 2022 திசெம்பர் 31 திகதியளவழவுதட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையின் ஆளணியனர் ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது 2020.11.07 திகதி ஆகும். அதனால் நிறுவனத்திற்கான கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்தல் 2021 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2021 – 2025 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்றை தயாரித்திருந்ததுடன் 2021.04.08. திகதி அதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்துள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் இத் திட்டம் கணக்கு ஆண்டு ஆரம்பிக்க 15 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.2 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 1/2014 கொண்ட நிதி மற்றும் கொள்கைகள் திட்டமிடல் அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் 2019 மற்றும் | 2019 ஆண்டு மற்றும் 2021 ஆண்டு நவம்பர் மாதம் வரை அதிகாரசபையின் ஆளணியினர் ஆட்சேர்ப்பு | சுற்றறிக்கை பிரகாரம் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட |

2020 ஆம் ஆண்டுகளுக்காக அதிகாரசபையினால் நிறுவனத்தின் நோக்கங்கள் மற்றும் பணிகள் உள்ளடங்கும் வகையில் செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்காததுடன் 2021 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலநடவடிக்கை திட்டத்தில் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்க திட்டங்கள், நிகழ்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் தோட்டங்களில் சட்டப்பூர்வ குடியிருப்பாளர்களுக்கு அந்த வீடுகளின் உரிமையை ஒப்படைப்பத்றகாக, அந்த குடியிருப்பாளர்களுக்கு உரிமை உறுதி வழங்களை இலகுவாக்கல் போன்ற செயற்பாடுகள் தவிர ஏனைய எவ்வித செயற்பாடுகளும் உள்ளடங்கும் வகையில் 2021 ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தினுள், இனங்கண்டு திட்டமிட்டிருக்கவில்லை.

மேலும் இந்த சுற்றறிக்கையின் 4 பிரிவின் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டிய பின்வரும் தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.

(அ) குறித்த ஆண்டிற்கு நாளாதுவரையாக்கப்பட்ட நிறுவன ஒழுங்கமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர் மற்றும் நிறுவனத்தின் தற்போதைய ஆளணியினர் பற்றிய விவரங்கள்

(ஆ) குறித்த ஆண்டிற்கான வரவு செலவு திட்டம்

(இ) குறித்த ஆண்டினுள் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமை பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டம், செயற்படுத்தப்படும் நேர அட்டவணைகள் மற்றும் அந்த நடவடிக்கைகளினால் எதிர்பார்க்கப்படும் வெளியீடுகள்/விளைவுகள்

திட்டம் அங்கீகரிக்கப்பட்டு இருக்காததுடன் ஆளணியினர் இல்லாதிருந்ததால் 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறவில்லை. 2021 ஆண்டில் அதிகாரசபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் இல்லாதிருந்ததன் மீது அமைச்சினால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் ஆரம்ப ஏற்பாடுகள் அவசியமற்ற பணிகளை மாத்திரம் இலக்காகக் கொண்டு 2021 ஆண்டிற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வேண்டும்.

(ஈ) முக்கிய பெறுகைகளுக்கான பெறுகைகள் திட்டம்

(உ) திறைசேரி ஏற்பாட்டின் மீது செயற்படும் முயற்சிகள் தொடர்பான வருடாந்த நடவடிக்கைகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுத் திட்டம்

(ஊ) உள் கணக்காய்வுத் திட்டம்

**3.3 உள்ளக கணக்காய்வு**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் 2003 ஜுன் 02 திகதிய இலக்கம் பீஈடீ/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை 01/2021 இன் பிரகாரம் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான நல்லாட்சி தொடர்பான வழிகாட்டிக் கோவை பிரகாரம் அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு அல்லது உள்ளக கணக்காய்வுப் பணிகளை அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டேனும் இல்லாததால் உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை அமைச்சின் ஊடாக மேற்கொள்வதற்கு 2023.01.30 திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபையில் தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கமைய அதிகாரசபையின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய உள்ளக கணக்காய்வுப் பரிவின் ஊடாக மேற்கொள்ள் அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்றை நிறுவுவதன் மூலமோ அல்லது அந் நடவடிக்கைகளை அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்புகள் இராஜாங்க அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அது தொடர்பான தீர்மானங்கள் உள்ளடங்கிய பணிப்பாளர் சபையின் தீர்மானம், அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் அதிகாரசபையின் கணக்காய்வுப் பணிகளை மேற்கொண்டு வெளியிடப்பட்ட உள்ளக கணக்காய்வு ஐயவினா எதுவும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கிறேன். உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை அமைச்சின் ஊடாக மேற்கொள்வதற்கு 2023.01.30 திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபையில் தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கமைய அதிகாரசபையின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய உள்ளக கணக்காய்வுப் பரிவின் ஊடாக மேற்கொள்ள அமைச்சிடம் கோரப்பட்டுள்ளது. | பணிப்பாளர் சபை தீர்மானம் மற்றும் உள்ளக கணக்காய்வு ஐயவினாக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.4 கணக்காய்வு குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய பீஈடி/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 பிரகாரம் ஒவ்வொறு மூன்று மாதங்களிற்கும் ஒரு முறை அதாவது ஆண்டிற்கு நான்கு தடவைகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதும், 2019, 2020 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகள் முடிவிலும் எந்தவொறு கூட்டங்களையும் நடாத்த அதிகாரசபைக்கு இயலாதிருந்தது. | அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வுப் பணிகள் மேற்பார்வைக்காக அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. உள்ளக கணக்காய்வு பிரிவினால் அவ்வப் போது பரீட்சிக்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள பிரகாரம் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் ஒவ்வொறு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.5 வரவு செலவுத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 ஜுன் 02 திகதிய பீஈடி/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரைவு வரவு செலவுத் திட்டத்தை அங்கீகாரம் வழங்குவதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், அதிகாரசபையினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்காக அவ்வாறு நடவடிக்கை எடுக்கவில்லையென கணக்காய்விற்கு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிக்க மூன்று மாதங்களுக்கு முன்னர் வரைவு வரவு செலவுத் திட்டத்திற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**3.6 நிலைபேறான அபிவிருத்தி நொக்கங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையினால் 2030 ஆம் ஆண்டளவில் அனைத்து நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை வழங்கும் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை அறிமுகப்படுத்திய போதும் அதற்கு பொருந்தும் வகையில் எதிர்பார்த்த நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை அடையாளம் காண்டிருக்காததுடன் சரியான தரவுகளை பெற்றுக் கொள்ளல் | நிலைபேறான அபிவிருத்தி 17 தொடர்பாக இலங்கை அடைய எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அல்லது அந்த தரவுகள் (baseline data) இதுவரை வெளியிடப்படவில்லை. அது தொடர்பான தேசிய திட்டமொன்று அல்லது மூலோபாய திட்டமொன்று ஏனும் இந்த நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை. எனவே, நிறுவனத்துடன் | நிலையான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலிற்கு பொருந்தும் வகையில் எதிர்பார்த்த நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகளை இனங்காண வேண்டும். |

| | |
|---|---|
| மற்றும் வளங்களை முகாமைத்துவம் செய்யும் முறைகளும், இனங்காணப்பட்டிருக்கவில்லை | தொடர்புடைய இலக்குகள் அல்லது குறிகாட்டிகளை இனங்காண முடியாததால் இதுவரை அவ்வாறு செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் இலக்குகளைத் தயாரிப்பதற்காக, நிலவும் தற்போதைய சூழ்நிலையில் தரவுகளைப் பெற்றுக் கொள்ள தரவு ஆய்வொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |